செ.கு. எண்: 197

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 18.11.2011

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தொட்டில்பட்டியைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகள் செல்வி ராதிகா 17.11.2011 அன்று, மேட்டூர் அனல் மின்நிலையத்திற்கு செல்லும் பாதையில் காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தின் மீது நடந்து செல்லும் போது, பாலத்தில் இருந்த சிமெண்ட் பலகை (Cement Slab) துவாரத்தில் தவறி விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த செல்வி ராதிகாவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான செல்வி ராதிகாவின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், ஆற்றுப் பாலங்களின் மீது போடப்பட்டிருக்கும் சிமெண்ட் பலகைகள் சிதிலமடைந்திருந்தால் அவைகளை உடனடியாக செப்பனிடுமாறு நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.